**திருநெல்வேலி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி (வ-து) திருநெல்வேலி - 3.**

*****

ந.க. 37/2023/சி1 நாள் : 28.12.2023

**சுற்றறிக்கை**

பொருள் : கூட்டுறவு வங்கிகளின் மூலம் ஊதியம் பெறும் பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு வீட்டு உபயோகப் பொருட்கள் வாங்கிட கடன் வழங்குதல் - தெளிவுரைகள் தொடர்புறுத்தல் - தொடர்பாக

பார்வை : 1) மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் 2023-24ஆம் ஆண்டிற்கான கூட்டுறவுத் துறையின் மானியத் கோரிக்கையின் போது வெளியிட்ட அறிவிப்புகள்

2) கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.24200/2023/மவகொ1 நாள் 08.05.2023

3) திருநெல்வேலி துணைப்பதிவாளர் அவர்கள் அங்கீகரித்த ஒழுங்குமுறை விதிகள் மே.எ.ந.க.3673/2022/ தொவேகூகச(3), நாள் 16.10.2023.

4) வங்கியில் உள்ள சொத்து பொறுப்புக்குழு (ALCO Committee)வட்டி நிர்ணயம் செய்த நாள்.16.12.2023

*****

பார்வையில் காணும் பதிவாளர் கடிதத்தில் கூட்டுறவு வங்கிகளின் மூலம் ஊதியம் பெறும் பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு வீட்டு உபயோகப் பொருட்கள் வாங்கிட கடன் வழங்கிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாய்ப்பினை பயன்படுத்தி கூட்டுறவு வங்கிகளின் மூலம் ஊதியம் பெறும் பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு வீட்டு உபயோகப் பொருட்கள் வாங்கிட கடன் வழங்க அனைத்து கிளை மேலாளர்களும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

1. **நோக்கம்**

டிவி., ஃபிரிட்ஜ், மிக்ஸி, கிரைண்டர், சோபா உள்ளிட்ட வீட்டு உபயோகப் பொருட்கள் போன்றவற்றிற்கு கடன் வழங்குதல்.

2. **கடன் வழங்கும் கூட்டுறவு வங்கிகள்**

(i) இக்கடன்கள் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் கிளைகள் மற்றும் மத்தியக் கூட்டுறவு வங்கிக் கிளைகள் மூலம் வழங்கப்படும்.

3. **தகுதி(Eligibility)**

(i) கூட்டுறவு வங்கிகளில் சம்பளக் கணக்கை பராமரிக்கும் Maintaining Salary Account with Cooperative Bank, பணியாளர்கள் (அரசு/பொதுத்துறை/தனியார்) மற்றும் ஓய்வூதியதாரர்கள் (அரசு/பொதுத்துறை/தனியார்).

(ii) கடன் மதிப்பீடு உயர்தரமாக (Credit Score - High) இருக்க வேண்டும்.

(iii) வங்கிக் கிளையின் செயற்பாட்டுப் பகுதியில் குடியிருக்க வேண்டும்.

4. **நிபந்தனைகள் (Conditions)**

(i) புதிய வீட்டு உபயோகப் பொருட்கள் வாங்குவதற்கு மட்டுமே கடன் அனுமதிக்கப்படும்.

5. **கடன் தொகை (**Loan Amount**)**

(i) வீட்டு உபயோகப் பொருட்களின் விலையில் (காப்பீடு, உதிரிபாகங்கள் மற்றும் வரிகள் உட்பட) 90% கடன் அல்லது ரூ.2இலட்சம் இவற்றில் எது குறைவோ அத்தொகை கடனாக வழங்கப்படும்.

(ii) 10% தொகை / எஞ்சிய தொகையை கடன்தாரர் செலுத்த வேண்டும்.

(iii) கடன் தொகை மற்றும் கடன்தாரர் செலுத்தும் சொந்த நிதி இரண்டையும் சேர்த்த விலைப்புள்ளி கொடுத்துள்ள நிறுவனத்திற்கு வரைவோலை (Demand Draft) – பணம் செலுத்த உத்தரவு (Pay order) – RTFS- NEFT மூலம் வங்கியே நேரடியாக வழங்கும்.

6. **கடனை திரும்பச் செலுத்தும் காலம் (**Loan repayment Period**)**

(i) கடன் வழங்கிய மாதத்திலிருந்து அதிகபட்சமாக 18 மாதங்களுக்குள் கடன் தொகை வட்டியுடன் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும்.

7. **வட்டி விகதம் (**Interest rate**)**

(i) கடனுக்கான வட்டி விகிதம் 10.50% வட்டி வசூலிக்கப்பட வேண்டும்.

8. **பிணையம்**

(i) மாதாந்திர தவணைத் தொகையினை தனது ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்து செலுத்துவதற்கான ஒப்புதலை உரிய படிவத்தில் கடன்தாரர் வங்கிக்கு அளிக்க வேண்டும்.

9. **கடன் வசூல்**

(i) கடன்தாரர், மாதாந்திர தவணைத் தொகையினை தனது ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்து செலுத்துவதற்கான ஒப்புதலை உரிய படிவத்தில் வங்கிக்கு அளிக்க வேண்டும். அதனடிப்படையில் கடன்தாரரின் மாதாந்திர ஊதியத்திலிருந்து கடன் முடிவு கட்டப்படும் வரை கடன் தொகை பிடித்தம் செய்யப்படும்.

(ii) தவணைக் காலத்திற்கு முன்னதாக முழுவதுமாக முடிவு கட்டப்படும் கடன்களுக்கு பின்வருமாறு அசலுக்கு வட்டி விதிக்கப்பட்டு வசூலிக்கப்படும்.

(a) ஓராண்டிற்குள் எனில் நிலுவையுள்ள அசல் தொகையில் 3% வட்டி

(b) ஓராண்டு முதல் ஈராண்டிற்குள் எனில் 2% வட்டி

10. **அபராத வட்டி** ( Penal Interest)

(i) கடன்தாரர் ஒரு தவணையை செலுத்தாவிட்டாலும் கூட அக்கடன் தவணை தவறிய கடனாக கருதப்படும். இத்தவணை தவறிய கடனுக்கு கடன் வட்டியுடன் தவணை தவறிய முதல் நாளிலிருந்து 2% சதவீதம் அபராத வட்டி வசூலிக்கப்படும்.

11. **தவணை தவறிய கடன்கள் மீது எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்** (Action to be taken for overdue loans)

(i) கடன் தொகைக்கான அசல் வட்டி மற்றும் அபராத வட்டியினைத் தொடர்ந்து மூன்று மாதங்களாகச் செலுத்தப்படாத நேர்வில் கடனை வசூலிக்க உரிய சட்டபூர்வ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

12. **கடன்தாரர் அளிக்க வேண்டிய ஆவணங்கள்** (Documents to be obtained)

(i) அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி பெற்று கடன் மனுவுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

(ii) பணிபுரியும் நிறுவனத்திலிருந்து பணிச் சான்று

(iii) கடந்த மூன்றாண்டுகளுக்கான வருமான வரி தாக்கல் செய்த அறிக்கை

(iv) கடன்தாரரின் ஆதார் அட்டை, வருமான வரி நிரந்தர கணக்கு எண் அட்டை மற்றும் குடும்ப அட்டை நகல்

(v) வங்கியால் கோரப்படும் இதர ஆவணங்கள்

13. **கட்டணங்கள்**

(i) கடன் விண்ணப்ப பரிசீலனைக் கட்டணம்

14. **கடன் வழங்கும் அதிகாரம்** (Loan sanctioning Authority)

(i) வங்கயின் கிளை மேலாளர் கடன்தாரரிடமிருந்து தேவையான ஆவணங்களைப் பெற்றுக் கொண்டு கடன் வழங்க வேண்டும். தலைமையக கிளையில் முதன்மை மேலாளர்/மேலாளர் / உதவி மேலாளர் ஆகியோர் கடன்தாரரிடமிருந்து தேவையான ஆவணங்களைப் பெற்றுக் கொண்டு வழங்க வேண்டும்.

15. **இதர நிபந்தனைகள்**

(i) கடன் அனுமதிக்கப்பட்ட பின் அச்சு ரசீது, கொள்முதல் பில், விலைப்புள்ளி வழங்கிய நிறுவனத்திடம் பெற்று வங்கியில் சமர்ப்பிக்க வேண்டும்.

(ii) கடன் வழங்கிய பின்னர் வங்கிக்கு திருப்தி அளிக்காவிடில், தவணைக்கு முன்னதாக முழுத் தொகையும் வசூலிக்கவோ அல்லது கடன் மூலம் வாங்கப்பட்ட வாகனத்தை திருப்பி எடுத்துக் கொள்ளவோ வாங்கிக்கு உரிமையுண்டு.

(iii) ஊதியம்/ஓய்வூதியம் பெறும் வங்கிகக் கணக்கை வங்கிக்கு தெரிவிக்காமல் மாற்றுதல் கூடாது

16. **வரம்பு உயர்வு (**Top-up)

(i) கடன்தாரர் கடன் தொகையில் 60 சதவிகிதத்தை எவ்வித தவணை நிலுவையின்றி திருப்பிச் செலுத்தியிருக்கும் பட்சத்தில், அவர் அந்தக் கடனில், ஏற்கனவே வழங்கிய உச்ச வரம்பிற்குள் கடன் பெற விருப்பம் தெரிவித்தால், மேற்கொண்டு அவருக்கு அக்கடனை வரம்பு உயர் (top-up) செய்யும் வசதி உள்ளது.

(ii) அவ்வாறு வரம்பு உயர்வு செய்யும் பட்சத்தில், ஏற்கனவே உள்ள கடன் நேர் செய்யப்பட்டு, புதிதாக வழங்கப்படும்.

(iii) வரம்பு உயர்வு செய்யப்பட்ட பின்னர், கடனைத் திருப்பிச் செலுத்தும் காலம் வரம்பு உயர்வு செய்த நாளிலிருந்து 18 மாதங்களாகவே இருக்கும்.

(ஒம்.)மா.உமாமகேஸ்வரி
இணைப்பதிவாளர்/ செயலாட்சியர்

செயலாட்சியருக்காக

பெறுநர்

1) தலைமையகம் உட்பட அனைத்து கிளை மேலாளர்கள்
2) அனைத்து களப்பணியாளர்கள்
3) மேலாளர், CBS பிரிவு/ வளர்ச்சி பிரிவு - Product Code தொடர்பாக தக்க நடவக்கைக்காக

நகல்

1) பொதுமேலாளர் / முதன்மை வருவாய் அலுவலர் / உதவி பொதுமேலாளர் (வங்கி) மற்றும் (கடன்) அவர்களது மேஜைக்கு